DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC.23/2025

Prosecution witness – PW3

| | | |
|---|---|---|
| Name | : திரு.குமரேசன் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(A1, A2 Present. A3 Absent. Petition U/s.317 Cr.P.C filed through online and allowed)
13.03.2025 at 01.25 P.M.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது சிக்கல் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் கட்ட விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா மற்றும் புலன் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் திரு.கார்த்திக் என்னுடன் சிக்கல் காவல் நிலையத்தில் பணிபுரிந்த காரணத்தால் அவர்கள் கையொப்பம் நன்கு தெரியும் என்பதன் அடிப்படையிலும், வழக்கு கோப்புகை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன்.

3. கடந்த 12.02.2024 ந் தேதி இரவு 20.45 மணிக்கு சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா நிலைப்பொறுப்பில் இருக்கும் போது சொக்கானை கிராமத்தை சேர்ந்த (இ) கீரைத்துறையில் இருக்கும் முனியசாமி த.பெ.ராஜபாண்டி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண்.16/2024 இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(1)ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். **அந்த புகார் மனு அ.சா.ஆ.2 ஆகும். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்.** புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கை அசலையும் இணைத்து கணம் கடலாடி நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

4. பின்னர் அன்றையே தினமே இரவு 21.30 மணிக்கு இவ்வழக்கு

கோப்பினை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நடராஜன் மற்றும் முருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும்**.

5. பின்பு பட்டியல் சாட்சிகளான முனியசாமி, சேதுவீரபாண்டியன், இராமலட்சுமி, மனோன்மணி, நடராஜன் மற்றும் முருகன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6. பின்பு இந்த வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் 1வது எதிரியை சொக்கானை விளக்கு பேய்க்குளம் பஸ் ஸ்டாப்பில் வைத்து 11.30 மணிக்கு கைது செய்து 11.45 மணிக்கு நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். 2 மற்றும் 3 ஆம் எதிரிகளுக்கு Crpc Sec–41(A) ன் படி அறிவிப்பு அனுப்பப்பட்டதால் கைது செய்யவில்லை.

7. அதன் பின்பு சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா பணிமாறுதல் ஆகி சென்றுவிட்டதால் வழக்கு கோப்புகளை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் திரு.கார்த்திக் வழக்கு கோப்புகளை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த இராமநாதபுரம் அரசு மருத்துவர் திரு.ராஜமூர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் அளித்த அ.சா.1 க்கான காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேட்டை பெற்றுள்ளார். மேற்படி காயத்தின் தன்மை சிறுகாயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அ.சா.1 க்கு வழங்கப்பட்ட காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆகும். பின்பு வழக்கின் வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவுகள் 294(b), 323,

8. 506(1) இதிலிருந்து மாற்றம் செய்து 294(b), 323, 324, 506(2) ஆக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும்.

9. இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள்

294(b), 323, 324, 506(2)ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை 22.11.2024 ந் தேதி கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் புலன் விசாரணை அதிகாரி புகார் மனு பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

2.எதிரிகளை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.13 17:46:22 +0000